Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 136 | புதன்கிழமை Wednesday | 18.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

## முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் தலைமையில்

# திமுக சார்பில் தேர்தலில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களிடம் நேர்காணல்



சென்னை:

திமுக தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் தலைமையில், திமுக சார்பில் தேர்தலில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களிடம் நேர்காணல் தொடங்கியது.

தமிழ்நாட்டில் ஏப்ரல் 23-ந்தேதிசட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ளது. மேலும், புதுச்சேரியில்ஏப்ரல் 9-ந் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது. அங்கு வேட்புமனு தாக்கல் தொடங்கியது. இந்த நிலையில், திமுக சார்பில் போட்டிய விருப்ப மனு அளித்தவர்களிடம் நேர்காணல் இன்று தொடங்கியது.

முதல் நாளான புதுச்சேரியில் சட்டமன்ற தொகுதிகளில், திமுக சார்பில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களிடம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் நேர்காணல் நடத்தினார். புதுச்சேரி யில் போட்டியிட 116 பேர் விருப்ப மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். அவர்களிடம் இன்று நேர்காணல் நடத்தப்பட்டது.திமுகதலைவர் மு.க ஸ்டாலின்,பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு, முதன்மை செயலாளர் கே.என். நேரு, அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி, புதுச்சேரி மண்டல பொறுப்பாளர் ஜெகத்ரட்சகன் எம்பி ஆகியோர் அடங்கிய குழு விருப்ப மனு அளித்தவர்களிடம், தனித்தனியாக நேர்காணல் நடத்தியது.

புதுச்சேரி மங்கலம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட விருப்ப மனு அளித்து நேர்காணலில் கலந்து கொண்ட பூஷ்பலதா கூறுகையில், "நேர்காணலில் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின், புதுச்சேரிக்கு உட்பட்ட மங்கலம் தொகுதி எப்படி உள்ளது? என்ன பொறுப்பில் உள்ளீர்கள்? புதுச்சேரியின் நிலவரம் குறித்தும் கேட்டார்.

வரும் சட்டமன்ற தேர்தலில் புதுச்சேரியில் அதிக தொகுதிகளில் திமுக போட்டியிட வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை வைத்தோம். புதுச்சேரியில் 25 ஆண்டுகளாக திமுக ஆட்சியில் இல்லை. ஆகையால் இங்கு திமுக ஆட்சி அமைத்து மக்கள் பணி செய்ய வாய்ப்பு வழங்கவேண்டும்என்று கேட்டுக் கொண்டோம். இப்போது புதுச்சேரியில் பாஜக ஆட்சி அமைந்துள்ளதால் எந்தவித நலன்களும் கிடைக்கவில்லை. இந்த முறை காங்கிரஸுக்கு அதிக சீட் ஒதுக்காமல் திமுகவிற்கு அதிக தொகுதிகள் ஒதுக்க வேண்டும் என்றும் முதல்வரிடம் கோரிக்கை வைத்துள்ளோம்" என்று கூறினார்.

புதுச்சேரி சட்டமன்ற தொகுதிகளுக்கு நேர்காணல் நடைபெற்ற நிலையில், நாளை முதல் வருகின்ற 22 ஆம் தேதி வரை தமிழகத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்கான வேட்பாளர் நேர்காணல் நடைபெறவுள்ளது.

புதுச்சேரி சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸுடன் தொகுதிப் பங்கீடு இன்னும் நிறைவடையாத நிலையில், அங்கு விருப்ப மனு அளித்தவர்களிடம் திமுக தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் இன்று நேர்காணல் நடத்தினார் என்பது குறிப்பிடத்த க்கது.

# 75 நாட்களில் 246 கொலைகள்... தமிழக மக்களுக்கு பாதுகாப்பில்லை: எடப்பாடி பழனிசாமி பேச்சு



திமுக அரசின் நிர்வாகத் திறமையின்மை மற்றும் சீர்கெட்டு வரும் சட்டம் - ஒழுங்கைக் கண்டித்து, தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில்தமிழகம் முழுவதும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் (மார்ச் 17) நடைபெற்று வருகின்றன. சென்னை விருகம்பாக்கத்தில் நடைபெற்ற போராட்டத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார்.

போராட்டத்தில் பேசிய எடப்பாடி பழனிசாமி, "தமிழகத்தில் போதைப்பொருட்களின் புழக்கம் அதிகரித்து, இளைஞர்களும் பொதுமக்களும் அதற்கு அடிமையாகி சீரழியும் அவலம் திமுக ஆட்சியில் நீடிக்கிறது. திருநெல்வேலியில் 9-ஆம் வகுப்பு மாணவி பள்ளியிலேயே மது அருந்தும் காட்சி ஊடகங்களில் வெளியாகி ஒட்டுமொத்த தமிழகத்தையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. நம் குழந்தைகளின் எதிர்காலத்திற்காக அவர்களைப் பள்ளிக்கு அனுப்புகிறோம்,ஆனால் அங்கு இத்தகைய கலாச்சாரம் பரவுவது வேதனையளிக்கிறது. இதுபற்றி அப்பா ஸ்டாலின் கவலைப்படுவதாகத் தெரியவில்லை," என்று குற்றம் சாட்டினார்.

செயலிழந்த உளவுத்துறை

தமிழகத்தில் உளவுத்துறை இருக்கிறதா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. உளவுத்துறை என்பது ஸ்டாலின் குடும்பத்திற்கு ஏவல் செய்யும் துறையாகவே மாற்றப்பட்டுள்ளது. போதை ஆசாமிகளைப் பிடிக்கச் செல்லும் காவலர்கள் மீதே தாக்குதல் நடத்தப்படுகிறது. காவலர்களுக்கே பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவும்போது, பொதுமக்களின் நிலை கேள்விக்குறியாக உள்ளது," என்றார்.

மேலும் சென்னை மாநகரில் பட்டப்பகலில் அரசியல் கட்சித் தலைவர் ஆர்ம்ஸ்ட்ராங் படுகொலை செய்யப்பட்டார்; உண்மையான குற்றவாளிகள் இன்னும் பிடிபடவில்லை.நெல்லை மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஜெயக்குமார் கொலை வழக்கிலும் இதுவரை முன்னேற்றம் இல்லை. நாங்குநேரி மற்றும் சிவகங்கையில் போதை ஆசாமிகள் பொதுமக்களை வெட்டிச் சாய்க்கும் கொடூரங்கள் அரங்கேறியுள்ளன. கிருஷ்ணகிரியில் 2 வயது குழந்தை, குமாரபாளையத்தில் 9 வயது சிறுமி, விளாத்திகுளத்தில் பள்ளி மாணவி என பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட குற்றச்ச ம்பவங்களை பட்டியிலிட்டார்.

மேலும் தமிழகத்தில் 75 நாட்களில் 246 கொலைகள் நடந்துள்ளது. தமிழக மக்களுக்கு பாதுகாப்பில்லை. நீதிமன்றம் அறிவுறுத்திய பிறகும் 9 மாதங்களாக ஒரு நிரந்தர டிஜிபியை நியமிக்கக் கூடத் திராணியற்ற அரசாக இது உள்ளது." என விமர்சித்தார்.

நிர்வாகச் சீர்கேடுகள் குறித்துப் பேசுகையில், "மின்கட்டணம் 67%, வீட்டு வரி 100%, கட்டிட அனுமதி கட்டணம் 3 மடங்கு என அனைத்து வரிகளையும் உயர்த்தி மக்களை இந்த அரசு வஞ்சித்துவிட்டது. கட்டுமான பொருட்கள் விலையும் பல மடங்கு உயர்ந்துள்ளது என்பதை சுட்டிக்காட்டினார்.

வசந்த காலம் ஆரம்பம்

மேலும் பேசிய அவர் "குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் காலம் வந்துவிட்டது. திமுக ஆட்சியின் ஆட்டம் கடந்த 15-ஆம் தேதியோடு முடிவுக்கு வந்துவிட்டது. தமிழகத்தில் இனி வசந்த காலம் ஆரம்பித்துவிட்டது. வரும் சட்டமன்றத் தேர்தலில் அதிமுக மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களுக்கு மக்கள் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும். மே மாதம் நல்லாட்சி அமையும், பெண்களுக்குப் பாதுகாப்பான சூழலும் இளைஞர்களுக்கு ஒளிமயமான எதிர்காலமும் உறுதி செய்யப்படும்," எனத் தனது உரையை நிறைவு செய்தார்.

# புதுச்சேரியில் பாஜக என்.ஆர்.காங்கிரஸ் கூட்டணியில் முறிவா? தொகுதி பங்கீட்டை புறக்கணித்த ரங்கசாமி



புதுச்சேரி: பாஜகவுடனான தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தையை புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி புறக்கணித்துள்ளார். இதையடுத்து, இரண்டு மணி நேரம் காத்திருந்த பாஜக மத்திய அமைச்சர் உள்ளிட்ட முக்கியத் தலைவர்கள் தனி விமானத்தில் கட்சி மேலிடத்தை சந்திக்க டெல்லி புறப்பட்டனர்.

புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் - பாஜக அடங்கிய தேசிய ஜனநாயகக் கூட்டணி மீண்டும் வரும் தேர்தலில் போட்டியிட உள்ளதாக தெரிவித்தது. அதன்படி என்.ஆர்.காங்கிரஸுக்கு 16 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. மீதமுள்ள 14 தொகுதிகளை பாஜக, அதிமுக,லட்சிய ஜனநாயககட்சிபிரித்துகொள்ள உள்ளதாகபாஜகமேலிட பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா தெரிவித்திருந்தார்.

இதில் பாமக-வுக்கு இடம் ஒதுக்காததால் பாமக 30 தொகுதிகளிலும் தனித்து போட்டியிட உள்ளதாக அறிவித்துள்ளது. இந்நிலையில் லாட்டரி அதிபர் ஜோஸ் சார்லஸ் மாரட்டின் கட்சியான லட்சிய ஜனநாயக கட்சியை கூட்டணியில் சேர்க்கக்கூடாது என ரங்கசாமி வலியுறுத்தி வருகிறார்.

இச்சூழலில் நேற்று இரவு மத்திய அமைச்சரும் தேர்தல் பொறுப்பாளருமான மன்சுக்மாண்டவியாவை என்.ஆர். காங்கிரஸ் தரப்பில் அமைச்சர் லட்சுமி நாராயணன், அரசு கொறடா ஏகேடி ஆறுமுகம், பொதுச்செயலர் ஜெயபால் உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் சந்தித்தனர். ஆனால், முதல்வர் ரங்காமி அவரை சந்திக்கவில்லை.

தொடர்ந்து அமைச்சர், கொறடா தரப்பில், தங்கள் தலைவரின் லட்சிய ஜனநாயக கட்சி எதிர்ப்பைதெரியப்படுத்தினர். காரசாரமாக நடந்த பேச்சுவார்த்தைக்கு பிறகு இன்று காலை மீண்டும் பேசுவோம் என்று புறப்பட்டனர். என்.ஆர். காங்கிரஸ் தரப்பிலோ லட்சிய ஜனநாயக கட்சியை கூட்டணியில் சேர்த்தால் பாஜகவுடன் கூட்டணி வேண்டாம் என்று தெரியப்படுத்தியுள்ளனர்.

இச்சூழலில் காலை 9 மணிக்கு என்.ஆர்.காங்கிரஸ் தரப்புக்காக பாஜகவினர் காத்திருந்தனர். இரண்டு மணி நேரம் ஆகியும் வராததால் மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா, அமைச்சர் நமச்சிவாயம், பேரவைத் தலைவர் செல்வம், மாநிலத் தலைவர் ராமலிங்கம் ஆகியோர் தனி விமானத்தில் டெல்லி புறப்பட்டனர்.

தொகுதியில் போட்டியிட விரும்பும் பாஜகவினர் அடங்கிய பட்டியலை மேலிடத்துக்கு தந்து தற்போதுள்ள என்.ஆர். காங்கிரஸ் நிலைப்பாட்டை தெரிவிக்கவுள்ளனர். இதனால் பாஜக - என்.ஆர் காங்கிரஸ் கூட்டணி முறிவு ஏற்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாக பேச்சு எழுந்துள்ளது.

# தொடர் சரிவில் தங்கம் விலை: பவுனுக்கு ரூ.480 குறைவு

சென்னை: 22 காரட் ஆபரணத் தங்கம் விலை (மார்ச் 17) பவுனுக்கு ரூ.480 என விலை சரிந்துள்ளது. அதே நேரத்தில் வெள்ளி விலை கிலோவுக்கு ரூ.4,000 உயர்ந்துள்ளது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு,தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு, உலக பங்குச் சந்தை முதலீடுகள் உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. இந்தச் சூழலில், தொடர்ச்சியாக தங்கம் விலை உயர்ந்தும் குறைந்தும் வருகிறது. உலக நாடுகளுக்கு இடையிலான வர்த்தக ரீதியான உறவு இதற்கு முக்கிய காரணம் என துறை சார்ந்த வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். ஈரான் - அமெரிக்கா, இஸ்ரேல் இடையிலான போர் காரணமாக தங்கத்தின் விலையில் தாக்கம் ஏற்பட்டுள்ளது. போர் காரணமாக சர்வதேச நாடுகளுக்கு கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. அதோடு வளைகுடா நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இதன் தாக்கம் தங்கத்தின் விலையில் எதிரொலித்து வருகிறது. கடந்த 12-ம் தேதி முதல் 22 காரட் ஆபரணத் தங்கத்தின்விலைதொடர்ந்து சரிந்து வருகிறது. அந்த வகையில் 6 நாட்களில் மட்டும் தங்கம் விலை பவுனுக்கு ரூ.3,760 வரை சரிந்துள்ளது.



**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/

CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# குளுக்கோமா விழிப்புணர்வு மற்றும் இலவச கண் சிகிச்சை முகாம்




பந்தலூர் அருகே காரக்கொல்லி சர்ச் மண்டபத்தில் நடைபெற்ற இலவச கண் சிகிச்சை முகாமில் 150க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

25பேர் கண்புரை அறுவைக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

உலக நுகர்வோர் தினம் மற்றும் உலக குளுக்கோமா தினத்தை முன்னிட்டு காரக்கொல்லி சென் மேரிஸ் சர்ச் மண்டபத்தில் இலவச கண் சிகிச்சை முகாம் மற்றும் குளுக்கோமா பாதிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

கூடலூர் நுகர்வோர் பாதுகாப்பு மையம், நீலகிரி மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம், கர்மேல் ஷாலோம் சாரிட்டபிள் டிரஸ்ட், காரக்கொல்லி சென் மேரிஸ் சர்ச், பந்தலூர் தாலுக்கா மாற்றுதிறனாளி நலச்சங்கம் ஆகியன இணைந்து நடத்திய

இலவச கண் சிகிச்சை முகாமிற்கு பந்தலூர் தாலுக்கா மாற்று திறனாளி நலச்சங்க தலைவர் அசோக்குமார் தலைமை தாங்கினார். காரக்கொல்லி சர்ச் நிர்வாகிகள் ஜோஸ், ஷிஜி முன்னிலை வகித்தனர்.

உதகை மருத்துவ கல்லூரி கண்மருத்துவ பிரிவு துறை தலைவர் மரு. அம்பிகா பேசும்போது குளுக்கோமா என்பது கண்ணின் அழுத்தம் அதிகரிப்பதால் ஏற்படுகிறது. இது கண்ணின் நரம்புகளை பாதித்து, பார்வை இழப்புக்கு வழிவகுக்கும். கண்ணின் அழுத்தம் அதிகரிப்பு, வயதாவது, உயர் இரத்த அழுத்தம் ஆகியன காரணமாக குளுக்கோமா பாதிப்பு ஏற்படும். தொடர் கண் வலி, தலைவலி, பார்வை மங்கல், கண்ணில் அழுத்தம் உள்ளிட்டவை இதன் அறிகுறிகளாகும். குளுக்கோமா பாதிப்பு இருந்தால், உடனடியாக கண் மருத்துவரை அணுகி சிகிச்சை பெற்றால் குணப்படுத்தலாம் என்றார்

தொடர்ந்து நடைபெற்ற கண் சிகிச்சை முகாமினை கூடலூர் நுகர்வோர் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம், சென் மேரிஸ் ஜாக்கோபைட் சர்ச் பாதிரியார் சான் ஜேக்கப், கர்மேல் ஷாலோம் டிரஸ்ட் நிர்வாகி தனராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

உதகைஅரசு மருத்துவ கல்லூரி கண் மருத்துவ குழுவினர் மருத்துவ அலுவலர்கள் அம்பிகா, தாவா மற்றும் ஜெப்ரின் உள்ளிட்டோர் கொண்ட குழுவினர் முகாமில் பங்கேற்ற 150க்கும்மேற்பட்டோருக்கு கண் சம்பந்தமான குறைபாடுகளுக்கு பரிசோதனை செய்தனர்.

முகாமில் கிட்ட பார்வை, தூர பார்வை, கண் அழுத்தம் கண்ணில் ஏற்படும் இதர பிரச்சனைகளுக்கு பரிசோதனை செய்து ஆலோசனைகள் வழங்கினார்கள். இதில் 25பேர் கண் புரை பாதிப்பு, 8 பேருக்கு கண் சதை வளர்ச்சி பாதிப்புகள் 3 பேருக்கு குளுக்கோமா பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது.

23 பேர் கண்புரை அறுவை சிகிச்சைக்கு தேர்வு செய்யபட்டு, உதகை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இலவச கண் புரை அறுவை சிகிச்சைக்கு அழைத்து செல்லபட்டனர். மற்றவர்கள் உரிய சிகிச்சை பெற மருத்துவ கல்லூரிக்கு பரிந்துரை செய்யப்பட்டனர்.

முகாமில் நுகர்வோர் மைய நிர்வாகிகள், மாற்று திறனாளி நலச்சங்க நிர்வாகிகள், சர்ச் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




2026சட்டமன்றத்தேர்தல்தேதிஅறிவிக்கப்பட்டதைதொடர்ந்துதேர்தல்விதிமுறைகள் நடைமுறைக்கு வந்துள்ளனஅதனை தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்வாகன சோதனையின் போது போலீசார் மற்றும் பறக்கும் படை அதிகாரிகள் சாலையில் வரும் வாகனங்களை நிறுத்தி வாகனங்களில் என்னென்ன பொருட்கள் கொண்டு செல்லப்படுகின்றன என சோதனை மேற்கொண்டனர், வாக்காளர்களுக்கு பணப்பட்டுவாடாவை தடுப்பு நோக்கில் இந்த பறக்கும் படை வாகன சோதனை நடைபெற்று வருகிறது மேலும் இந்த சோதனையில் ஜிபிஎஸ்கருவிமூலம்தேர்தல்கட்டுப்பாட்டுஅறையில்இருந்துஅதிகாரிகள்கண்காணித்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்ஆறு சட்டமன்ற தொகுதிகள் உட்பட்ட குமரி மாவட்டத்தில் 60க்கும் மேற்பட்ட பறக்கும் படை வாகனங்கள் சோதனை ஈடுபட்டு வருகின்றனர்.



# ஆம்னி பஸ் மோதி இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் உயிரிழப்பு

கன்னியாகுமரி மாவட்டம் வில்லுக்குறி அருகே தென்கரை உடுப்பி ரெஸ்டாரன்ட் பகுதியில் இன்று ஏற்பட்டகோரசாலைவிபத்தில்இருசக்கரவாகனத்தில் வந்த 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. ஆம்னி பஸ் இருசக்கர வாகனத்தில் வந்தவர்களை மோதியதாக கூறப்படுகிறது. விபத்துக்குப் பிறகு கட்டுப்பாட்டை இழந்த ஆம்னி பஸ் அருகில் உள்ள வள்ளி ஆற்றுப் பகுதியில் தொங்கிய நிலையில் கிடந்தது. சம்பவம் குறித்து தகவல் அறிந்த போலீசார் மற்றும் மீட்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த விபத்து தொடர்பாக போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற காளிகேஷம் காளியம்மன் கோவிலுக்கு செல்லும் பக்தர்களிடம் வனத்துறையினர் கட்டாய பணம் வசூல் செய்வதை நிறுத்த கேட்டு குமரி மாவட்ட ஆட்சியரிடம் இந்து முன்னணியினர் மனுமேலும் தீ தடுப்பு நடவடிக்கை,வெள்ள அபாய நடவடிக்கை என்ற பெயரில் கோவிலுக்கு விடாமல் பக்தர்களைவனத்துறையினர்தடுத்து நிறுத்துவதைகண்டிப்பதாகவும்தெரிவித்துள்ளனர்.

# உளுந்தூர்பேட்டை அருகே 17 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை போஸ்கோ சட்டத்தில் கைது



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள ஒரு கிராமத்தைச்சேர்ந்தவர் மணிகண்டன் மூன்று குழந்தைகளின் தந்தையான இவருக்கு வயது 45 இவர் அதே பகுதியைச் சேர்ந்த 17 வயது சிறுமிக்கு தொடர்ந்து பாலியல் தொல்லை கொடுத்து வந்ததாக கூறப்படுகிறது இதுகுறித்து சிறுமியின் பெற்றோர் உளுந்தூர்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்தனர் அதன் பேரில் வழக்கு பதிவு செய்த போலீசார் மணிகண்டனை போஸ்கோ சட்டத்தின் கீழ் கைது செய்து நீதிமன்ற உத்தரவுப்படி சிறைக்கு அனுப்பி வைத்தனர்.

ஈரோடு மாவட்டத்தில்

# மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் சிக்கய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்

## மாணவ, மாணவிகள் பங்கேற்கும் தேர்தல் விழிப்புணர்வு பேரணி




ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் சிக்கய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவ, மாணவிகள் பங்கேற்கும் தேர்தல் விழிப்புணர்வு பேரணி மற்றும் விழிப்புணர்வு வாகனத்தினை துவக்கி வைத்தார்.

ஈரோடு மாவட்டம், சிக்கய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நேற்று (17.03.2026) மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்கும் தேர்தல் விழிப்புணர்வு பேரணி மற்றும் விழிப்புணர்வு வாகனத்தினை துவக்கி வைத்தார்.

இந்திய தேர்தல் ஆணையம், தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் (23.04.2026) அன்று நடைபெறவுள்ளது என(15.03.2026)அன்று அறிவித்துள்ளதை தொடர்ந்து,பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி இன்றையதினம், கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு பேரணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதில் கல்லூரி மாணவ, மாணவிகள் "வாக்களிப்பு என்பது நம் ஜனநாயகத்தின் அடித்தளம். ஒவ்வொரு குடிமகனின் வாக்கும் நாட்டின் எதிர்காலத்தைதீர்மானிக்கும்சக்தி கொண்டது. ஒரு வாக்கு பெரிய மாற்றத்தை உருவாக்க முடியும். வாக்கு செலுத்துவது நம் உரிமை மட்டுமல்ல, அது நம் கடமையும் ஆகும்." என்ற வாசகங்கள் அடங்கியபதாகைகள் ஏந்தி சென்று வழியெங்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி சென்றனர். இப்பேரணியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கல்லூரி மாணவ, மாணவியர்களுடன் நடத்து சென்று வழியெங்கும் தேர்தல்குறித்ததுண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இப்பேரணியில் 300-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர்.

முன்னதாக, அதிநவீன மின்னணு வாகனம் மூலமாக தேர்தல் விழிப்புணர்வு குறும்படங்களை ஒளிபரப்பும் வீடியோ விளம்பர வாகனத்தினை துவக்கி வைத்தார். இவ்வாகனமானது. ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து

சட்டமன்ற தொகுதிகளிலும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் திரையிடப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தபடவுள்ளது.

தொடர்ந்து, வீரப்பன்சத்திரம் பகுதியில் பறக்கும் படை குழுவினர் வாகன சோதனையில் மேற்கொள்ளப்பட்டதை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

இப்பேரணியில், துணை இயக்குநர்/ திட்ட இயக்குநர். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பிரியா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.சுகுமார். சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் திருக்குமரன், ஈரோடு வருவாய் வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன், உதவி மக்கள் தொடர்பு உட்பட துறை சார்ந்த அலுவலர் (செய்தி) செ.கலைமாமணி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஆலோசனை கூட்டம்






சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா அலுவலக கூட்டரங்கில் நடைபெற உள்ள 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலை முன்னிட்டு 187-மானாமதுரை (தனி) சட்டமன்ற தொகுதியில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமல்படுத்தப்பட்ட நிலையில், விதிமுறைகளை முறையாக கடைப்பிடிப்பது தொடர்பான அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஆலோசனை கூட்டம் தேர்தல் நடத்தும் அலுவலர் ராஜாசிங் மற்றும் வட்டாட்சியர் கிருஷ்ணகுமார் தலைமையிலும், மானாமதுரை துணை காவல் கண்காணிப்பாளர் ராஜா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

இதில் அரசியல் கட்சிகள் அரசியல் பிரமுகர்கள் பூத் ஏஜெண்டுகள் வேட்பாளர்கள் உள்ளிட்டோர் பின்பற்றப்பட வேண்டிய தேர்தல் விதிமுறைகள் குறித்த விளக்கங்களும், விழிப்புணர்வுகளும் வழங்கப்பட்டு, பிரமுகர்களின் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நகர் காங்கிரஸ்கமிட்டிதலைவரும், நகர் மன்ற உறுப்பினருமான எஸ். பி. புருஷோத்தமன் அவர்களின் தலைமையிலான காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மானாமதுரை சட்டமன்ற தொகுதியில் உள்ள திமுக, காங்கிரஸ், அஇஅதிமுக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், மதிமுக, விசிக, தேமுதிக, நாதக உட்பட அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் நிர்வாகிகள், பூத் நிலை அதிகாரிகள், பத்திரிக்கையாளர்கள், காவல்துறையினர் கலந்து கொண்டனர்.



வருகின்ற 23.04.2026 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி (17.03.2026) நேற்று "வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை' வாசகம் அடங்கிய துண்டு பிரசுரத்தை பொதுமக்களுக்கு வழங்கி, விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

# தத்துக் குழந்தை வயது எதுவாகினும் தாய்க்கு மகப்பேறு விடுப்பு உண்டு: உச்சநீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி: தத்தெடுக்கும் குழந்தையின் வயது எத்தகையதாக இருந்தாலும் தாய்க்கு மகப்பேறு விடுப்புக்கு உரிமை உண்டு என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.



தத்தெடுக்கும் தாய், மூன்று மாதங்களுக்கு உட்பட்ட குழந்தையை தத்தெடுத்தால் மட்டுமே 12 வார கால மகப்பேறு விடுப்பு வழங்கப்படும் என்று கூறும் சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 60(4)-ஐ எதிர்த்து வழக்கறிஞர் ஹம்சா நந்தினி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஜே.பி. பர்திவாலா, ஆர்.மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு, இன்று தனது தீர்ப்பை அளித்தது.


உச்சநீதிமன்றத்தின்இந்ததீர்ப்பில்,"மூன்று மாதங்களுக்கு உட்பட்ட குழந்தையை தத்தெடுத்தால் மட்டுமே 12 வார கால மகப்பேறு விடுப்பு வழங்கப்படும் என்று கூறும் சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 60(4),அரசியலமைப்பின் 14 மற்றும் 21 ஆகிய சரத்துகளுக்கு முரணானது. எனவே, சட்டப்பிரிவு 60(4) ரத்து செய்யப்படுகிறது" என தெரிவித்துள்ளது. மேலும், தாய்க்கு வழங்கப்படும் மகப்பேறு விடுப்பை (maternity leave) போல, தந்தைக்கான விடுப்பையும் (paternity leave) சமூக பாதுகாப்புச் சலுகையாக அங்கீகரிக்கும் வகையில் ஒரு சட்ட விதியை மத்திய அரசு வகுக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.



வருகின்ற 23.04.2026 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி நேற்று (17.03.2026) ஈரோடு மாவட்டம், வீரப்பன் சத்திரம் பகுதியில் பறக்கும் படை குழுவினர்கள் மேற்கொண்டுவரும் வாகனத்தணிக்கை பணியினை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளராக D.V.கிரண் ஸ்ருதி நேற்று (17.03.2026) பொறுப்பேற்றுக்கொண்டதைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்டத் தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி அவர்களை நேரில் சந்தித்த போது எடுத்த புகைப்படம்.



# காங்கிரஸ் கமிட்டி சார்பில் வேட்பாளர் நேர்காணல்

தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பாக, சட்டமன்றத்தேர்தலில்போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களுக்கான நேர்காணல் நடைபெற்றது.தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் உள்ள கோவில்பட்டி, விளாத்திகுளம் மற்றும் ஒட்டப்பிடாரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட விருப்பம் தெரிவித்தவர்களிடம் கட்சியின் மூத்த முன்னோடிகள் முன்னிலையில் ஆலோசனைக் கூட்டம் மற்றும் நேர்காணல் நடைபெற்றது.நேர்காணலில் பங்கேற்றவர்களில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களின் பெயர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு இறுதிப் பரிந்துரை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் கட்சித் தொண்டர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாடு அரசின் சுற்றுசூழல் காலநிலை சார்பில் 2025க்கான பசுமை முதன்மையாளர் விருது



ஆவுடையார் கோவில் மார்ச்.17

புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறந்த சமூக சேவைக்கான விருது பெற்ற புன்னகை அறக்கட்டளை நிறுவனர் ஆ.சே.கலைபிரபு அவர்கள் அரசு சொந்தமான இடங்களில் மரம், பனைவிதைகள் நடுதல், பாரமரிப்பு, தூய்மை பணி செய்தல்,

அரசுபள்ளிகள் தோறும் மரம் நடுதல், வழங்குதல் & மஞ்சப்பை விழிப்புணர்வு., பனைமர குறுங்காடுகள் அமைத்ததுடன் நீர்நிலை பாதுகாப்பு, நெகிழி மறுசுழற்சி, திடக்கழிவு மேலாண்மை, இயற்கை விவசாயம், விழிப்புணர்வு, மண்புழு உரம் தயாரிப்பு, என கிராமப்புற மாணவர்களிடத்தில் சுற்றுச்சூழல் ஆர்வத்தை ஏற்படுத்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு முழுமுதல் முயற்சியுடன் சிறந்த பங்களிப்பு செய்தமையினை பாராட்டி தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் சார்பில் வழங்கப்படும் உயரிய விருதான பசுமை முதன்மையர் விருது-2025" (கிரீன் சாம்பியன்) புதுக்கோட்டை மாவட்டம்,ஆவுடையார் கோவில் ஒன்றியம், அமரடக்கி சேர்ந்த புன்னகை அறக்கட்டளை நிறுவனத்தலைவர்

ஆ.சே. கலைபிரபு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. விருதுச் சான்றிதழுடன் ரூபாய் ஒரு லட்சத்திற்கான காசோலையினை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி. மு.அருணா IAS அவர்கள் வழங்கி பாராட்டினார்கள். இந்த விருதினை பெற்ற ஆ. சே,கலைபிரபுஅவர்களுக்கு அரசியல் பிரமுகர்கள் சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் சமூக வலைதளங்களில் வாழ்த்துக்கள் தெரிவித்து வருகின்றனர் அதனைத் தொடர்ந்து விருதுடன் பெற்ற ஒரு லட்சம் ரூபாயை மக்களுக்கான மருத்துவம், பள்ளிமாணவர்களுக்கு கல்விக்காக பயன்படுத்த உறுதியேற்றுக் கொண்டார்



வருகின்ற 23.04.2026 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி நேற்று (17.03.2026) சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு வீடியோ வாகளத்தின் மூலம் ஒளிபரப்பு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு குறித்த குறும்படம் ஒளிபரப்பு செய்யப்பட்டதை பார்வையிட்டார். உடன் திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பிரியா, கல்லூரி முதல்வர் திருகுமரன், வருவாய் வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன் உட்பட பலர் உள்ளனர்.





# நந்தா செவிலியர் கல்லூரியில் தீபம் ஏற்றும் விழா

நந்தா செவிலியர் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான "தீபம்ஏற்றும்விழா" நிகழ்ச்சி இனிதே நடைபெற்றது. இவ்விழாவினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை உறுப்பினர் பானுமதி சண்முகன் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமை தாங்கி உரையாற்றுகையில், நோயாளிகளை அன்புடனும் பொறுப்புடனும் கவனிப்பதன் மூலம் சமூகத்தில் செவிலியர்களுக்கு தனி மரியாதை கிடைக்கின்றது. அதனைத் தக்க வைத்து கொண்டு சிறந்த சேவையினை வழங்க முன்வருமாறு மாணவர்களைக் கேட்டு கொண்டார்.மேலும், ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணைநிர்வாக அறங்காவலர்களான எஸ். நந்தகுமார் பிரதீப், எஸ்.திருமூர்த்தி மற்றும் கல்லூரியின் முதல்வர் பேராசிரியை ஆர்.வசந்தி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். முன்னதாக கல்லூரியின் துணை முதல்வர் பேராசிரியை ஏ. ஹமுது நிஷா வரவேற்புரையாற்றினார்.மேலும் இந்நிகழ்ச்சியில், கோவையில் செயல்பட்டு வரும் கே.எம்.சி.ஹெச் செவிலியர் கல்லூரியின் முதலவர் மருத்துவர் எஸ். மாதவி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். அவர்கள் தம் உரையில், செவிலியர் பணி என்பது கருணை, பொறுப்பு மற்றும் ஒழுக்கம் அடிப்படையில் இயங்கக்கூடிய ஒரு உன்னதமான உயர்ந்த பணியாகும் என்றார். மேலும், நோயாளிளை அன்பு மற்றும் பாசத்தினை செலுத்தி அர்ப்பணிப்புடன் செயல்பட்டு சிறந்த செவிலயர்களாக உருவாக தனது வாழ்த்துகள் என்று மாணவ-மாணவியர்களை பாராட்டினார்.

பின்னர், முதலாமாண்டு மாணவர்கள் அனைவரும் தீபம் ஏற்றி கல்லூரி நிர்வாகத்தினர்கள், முதல்வர், மற்றும் பேராசிரியர்கள் முன்னிலையில் புளோரன்ஸ் நைட்டிங்கேல் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

இவ்விழாவின் முடிவில் செவிலியர் கல்லூரியின் பேராசிரியை ஆர். ஸ்நேகா நன்றியுரை வழங்கினார்.

# தூத்துக்குடி மத்திய மாவட்டம் தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் முப்பெரும் விழா



தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கத்தின் பேரமைப்பின் தூத்துக்குடி மத்திய மாவட்ட தலைவர் எஸ்டிகே.சிவா தலைமையில் நடைபெற்றஇந்தமுப்பெரும் விழாவில், பேரமைப்பின் மாநில தலைவர் கொளத்தூர் த.ரவி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார். மத்திய மாவட்ட தலைவர் பொன் செல்வன், துணைத் தலைவர் வினோத் சேட்டா, ஒருங்கிணைப்பாளர் சரவணபிரியன்,இணைசெயலாளர் கார்த்திக் முன்னிலை வகித்தனர். மாநில துணைச்செயலாளர்வழக்கறிஞர்ஜெயச்சந்திரன் வரவேற்புரை ஆற்றினார்.தென் மண்டலதலைவர்கோடீஸ்வரன் விளக்க உரையாற்றினார். தவெக மாவட்ட நிர்வாகி அஜிதா ஆக்னல் குத்துவிளக்கேற்றினார்.

முப்பெரும் விழா சிறப்பு அழைப்பாளர்களாக பாஜக மாநில செயற்குழு உறுப்பினர் விவேகம் டிராவல்ஸ் விவேகம் ஜி ரமேஷ், தூத்துக்குடி வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் பெருமாள் சாமி, அதிமுக தலைமைக் கழக நட்சத்திர பேச்சாளர் எஸ்.டி.கருணாநிதி, முன்னாள் அம்மா பேரவை மாவட்ட இணைச் செயலாளர்சி.த.செ.ஜெபசிங்,ரோட்டரி முன்னாள் கவர்னர் வில்சன் குரூப்ஸ் சேசையா வில்வராயர், ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து மாவட்ட தலைவர்கள் தூத்துக்குடி வடக்குலிங்ககுமார்,கிழக்கு ஸ்டீபன், மேற்கு தங்கமணி, தெற்கு தர்மராஜா, திருநெல்வேலி அலெக்ஸ், நெல்லை தெற்கு ஜெயகோபால், தூத்துக்குடி புறநகர் ஜான் ராஜா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கத்தின் பேரமைப்பின்

முதலாம் ஆண்டு வெற்றி விழா, நிர்வாகிகள் அறிமுக விழா, கிளைச் சங்கங்கள் இணைக்கும் விழா என முப்பெரும் விழா சிறப்பாக நடைபெற்றது. பேரமைப்பின் மாநில தலைவர் கொளத்தூர் த.ரவி சிறு வியாபாரிகள் மற்றும் எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்டத் தலைவர் எஸ்டிகே.சிவா ஏற்பாட்டில் வழங்கினார். தொடர்ந்து புதிய நிர்வாகிகளுக்கு அடையாள அட்டை மற்றும் சிறப்பாக பணியாற்றி வரும் பேரமைப்பின் நிர்வாகிகளுக்கு கேடயங்கள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிகளை மாவட்ட இணை செயலாளர் முரளி தொகுத்து வழங்கினார்.

விழாவில் தூத்துக்குடி மத்திய மாவட்ட பொருளாளர் ராபின்சன் நன்றியுரை ஆற்றினார். நிகழ்வில் அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது. விழாவில் தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்க பேரமைப்பின் மாநில, மண்டல, மாவட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண் ஸ்ருதி (17.03.2026) நேற்று ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பொறுப்பேற்றுக்கொண்டார்.

## தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில்

# பள்ளி அளவிலான மாணவர்களுக்கு இடையே சதுரங்கப் போட்டி



தேவகோட்டை - சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் பள்ளி அளவிலான மாணவர்களுக்கு இடையே சதுரங்கப் போட்டி நடைபெற்றது. இதில் ஏராளமான மாணவ மாணவியர் பங்கேற்றனர். பள்ளி தலைமை ஆசிரியர் லெ .சொக்கலிங்கம் தலைமை தாங்கி போட்டிகளை துவக்கி வைத்தார். பள்ளி ஆசிரியர் ஸ்ரீதர் வரவேற்றார். மூன்று, நான்கு, ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு ஒரு பிரிவாகவும்,6, 7 ,8, ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வகுப்புகள் வாரியாகஐந்து பிரிவுகளாகபோட்டிகள் நடந்தன. இதனில் காரைக்குடி சாணக்கியா அகாடமியின் நிறுவனர் சோமநாதன் அதுலன் மற்றும் பயிற்சியாளர்கள் சாந்தினி ,திவ்யா ஆகியோர் நடுவர்களாகசெயல்பட்டனர். மாணவர்கள் ஆர்வத்துடன் போட்டிகளில் பங்கேற்றனர். பள்ளி அளவில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் பங்கேற்றது தங்களுக்கு புது தன்னம்பிக்கைஏற்படுத்தியதாக மாணவர்கள் தெரிவித்தனர். ஆசிரியை முத்துலட்சுமி நிறைவாக நன்றி கூறினார்.

# தேர்தல் பறக்கும் படையினர் நடவடிக்கை: உரிய ஆவணங்கள் இல்லாமல் எடுத்து சென்ற பணம் பறிமுதல்

சென்னை:

தேர்தல் பறக்கும் படையினர் மேற்கொண்ட சோதனையில் மெரினா உட்பட 3 இடங்களில் லட்சக்கணக்கில் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெற உள்ளது.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் நேற்று முன்



தினம் மாலை முதல் அமலுக்கு வந்துள்ளன. இதையடுத்து , அரசியல் கட்சிகள், பணம் கொடுத்து வாக்காளர்களை கவர்வதைதடுக்க தேர்தல்ஆணையம்பறக்கும்படைகளை அமைத்துள்ளது. இந்த பறக்கும் படையினர் முக்கிய பகுதிகளில் கண்காணித்து வருகின்றனர்.அதன்படி, மெரினா காமராஜர் சாலையில் அகில இந்திய வானொலி நிலையம் முன்பு சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டப்பேரவை தொகுதி பறக்கும்படை பொறுப்பாளர் உதவி செயற்பொறியாளர் திலக் தலைமையில் நேற்று மாலை கண்காணித்தனர்.

அப்போது, அந்த வழியாக வந்த கார் ஒன்றை மறித்து சோதித்தபோது உரிய ஆவணங்கள் இல்லாமல் அதில் ரூ.1.29 லட்சம் இருந்தது தெரிந்தது.அதை பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

விசாரணையில் காரை ஓட்டி வந்த நபர் மயிலாப்பூரை சேர்ந்த கார்த்திக் என்பதும், கட்டுமான பணிக்காக அந்த பணத்தை கொண்டு சென்றதும் தெரியவந்தது. இதேபோல், வில்லிவாக்கம் தொகுதியில் ரூ.1.16 லட்சம்,எழும்பூர் தொகுதியில் ரூ.55 ஆயிரம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. உரிய ஆவணங்கள் இல்லாமல் ரூ.50 ஆயிரத்துக்கு மேல் பணம் கொண்டு சென்றால் பறிமுதல் செய்யப்படுகிறது.



# செந்துறை வட்டார வள மையத்தில் இரு அரிமா சங்கங்கள் இணைந்து கணினி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கல்

அரியலூர் மாவட்டம் செந்துறை வட்டார வள மையத்தில் பெண்ணாடம் அரிமா சங்கம் மற்றும் செந்துறை சினேகம் அரிமாசங்கம் ஆகியவை இணைந்து மையத்திற்குத் தேவையான கணினி உபகரணங்கள் மற்றும் பள்ளிக்கான பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டன.

இந்நிகழ்வில், கொடையாளர் அரிமா வேலாயுதம் பிள்ளை, எல்.வி.வி. உணவு சேவை நிறுவனம் மற்றும் அவர்களது குடும்பத்தினர் சார்பாக, மையத்திற்குத் தேவையான கணினி மற்றும் அதன் உபகரணங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன. மேலும், விழாவில் பங்கேற்ற அனைவருக்கும்காலைச் சிற்றுண்டி மற்றும் மதிய உணவும் இவர்களால் வழங்கப்பட்டது. பள்ளியின் நலத்திட்ட உதவிக்காக, செந்துறை சினேகம் அரிமா சங்கத்தின் தலைவர் செல்வகணபதி ரூபாய் இரண்டாயிரம் நிதியுதவியினை வழங்கினார்.

இவ்விழாவில் பெண்ணாடம் அரிமா சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் அரிமா வசந்த ராஜ், மாவட்ட உடல் தானப் பிரிவின் தலைவர் அரிமா டி.வி.கே.வி. சக்திவேல், செயலாளர் அழகுவேலன் மற்றும் துணைத் தலைவர் சக்தி சபரீஷ் ஆகியோர் பங்கேற்றனர். செந்துறை சினேகம் அரிமா சங்கத்தின் சார்பில் அதன் தலைவர்செல்வகணபதி, சாசனத் தலைவர் செல்வம், செயலாளர் ஆதவன் மற்றும் சேவைத் திட்டத் தலைவர் சிவகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

செந்துறைவட்டாரவள மையத்தின் சார்பில் மேகலா,சுப்பிரமணியன், அன்பரசன், இளங்கோவன், முருகேசன், மாணிக்க ராஜா, உஷா, வினித் குமார், சோபியா, எஸ்.ஆர். ராணி ஆகியோருடன் பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவ, மாணவியர் திரளாகக் கலந்துகொண்டனர்.

முடிவில், சிறப்பான முறையில் சேவைத் திட்டங்களை வழங்கிய கொடையாளர்களுக்கும், பெண்ணாடம் மற்றும் செந்துறை அரிமா சங்கத்தினருக்கும் வட்டார வள மையத்தின் சார்பில் மனமார்ந்த வாழ்த்துகளும், பாராட்டுகளும் தெரிவிக்கப்பட்டன.

# தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் விடுத்துள்ள அறிக்கை



தமிழக அரசியலில் கொங்கு மண்டலத்தில் 1996 ஆம் ஆண்டுக்குப் பிறகு முன்னாள் அமைச்சர் அரங்கநாயகத்திற்கு பிறகு நாடார்களுக்கான அரசியல் வெற்று இடமாகவே இருக்கிறது. கொங்கு மண்டலத்தில் சுமார் 60 சட்டமன்ற தொகுதிகள் இருக்கின்றது. இதில் 20 க்கும் மேற்பட்ட சட்டமன்ற தொகுதிகளில் வெற்றி வாய்ப்புகளை நிர்ணயிக்ககூடிய இடத்தில் நாடார் சமுதாய மக்கள் இருக்கிறார்கள். கொங்கு மண்டலத்தில் குணாளன் நாடாருக்கு மணிமண்டபம் கட்ட வேண்டும் என்று பல ஆண்டுகளாக நாடார்கள் கோரிக்கை வைத்து வருகிறார்கள். கொங்கு மண்டலத்தில் நாடார் மக்கள் முன்னேற்ற சங்கத்தின் நிறுவனத்தலைவர் பொன் விசுவநாதன் தலைமையில் நடைபெறுகின்ற குணாளன் நாடார் விழாவில் அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்களும் கலந்து கொண்டு வருகிற ஆண்டு குணாளன் நாடாருக்கு மணிமண்டபம் கட்டி விடுவோம் என்று ஒவ்வொரு ஆண்டும் சொல்லுகிறார்கள் ஆனால் எந்த பயனும் இல்லை.

20க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி வாய்ப்பை நிர்ணயிக்க கூடிய இடத்தில் நாடார் மக்கள் இருந்தாலும் கோபி சட்டமன்ற தொகுதியில் மட்டும் ஒரு லட்சத்திற்கும் மேலான நாடார் வாக்குகள் இருக்கிறது. அதனால் 2026 சட்டமன்றத் தேர்தலில் கொங்கு மண்டலத்தில் நாடார்களுக்கு அரசியல் கட்சிகள் போட்டியிடுவதற்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும் அப்படி இல்லை எனில் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து நாடார் அமைப்புகளும் ஒன்றிணைந்து கொங்கு மண்டலத்தில் மிகச் சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கின்ற நாடார் மக்கள் முன்னேற்ற சங்கத்தின் நிறுவனதலைவர்பொன் விஸ்வநாதன் அவர்களை கோபி தொகுதியின் வேட்பாளராக நியமித்து அனைத்து நாடார் சங்கங்களும் அவர் வெற்றி பெறுவதற்காக உழைப்போம்.

மேலும் கொங்கு மண்டலத்தில் நாடார்கள் பெரும்பான்மையாக வாழக்கூடிய சட்டமன்ற தொகுதிகளில் நாடார் சமுதாயத்தவர்கள் போட்டியிட விரும்பினால் அவர்களைகண்டறிந்துஅவர்களையும் வேட்பாளராக நியமித்து வெற்றி பெற பாடுபடுவோம்.அப்போதுதான் கொங்கு மண்டலத்தில் நாடார்களுக்கான அரசியல் விழிப்புணர்வு ஏற்படும் அதனால் அரசியல் கட்சிகள் நாடார்களுக்கு போட்டியிட வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும் அல்லது நாடார்கள் சங்கங்கள் ஒன்றிணைந்து சுயேச்சை வேட்பாளர்களை களம் அமர்த்த முன்வருவோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்



# இளைஞர்களுக்கு தொழிற்கல்வி வழங்கி, வேலை வாய்ப்பை உருவாக்க இலவச தொழிற்கல்வி மையத்தின் துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது

இளைஞர்களுக்கு தொழிற்கல்வி வழங்கி, வேலை வாய்ப்பை உருவாக்க இலவச தொழிற்கல்வி மையத்தின் துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது இதன்மூலமாக கிராமபுற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக உள்ளது. பொருளாதார ரீதியாகபின்தங்கிய இளைஞர்களுக்கு தொழிற்கல்வி வழங்கி வேலைவாய்ப்பை உருவாக்கும் நோக்கில் எஸ்.கே.பி சுனந்தா ராம்மோகன் திறன் எனும், மையம் உடுமலைப்பேட்டையில் தொடங்கப்பட்டுள்ளது. இந்த மையம் 18 முதல் 27 வயதுக்குள் உள்ள, பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு மேல் படித்த, ஆண்டு குடும்ப வருமானம் ரூ.3 லட்சத்திற்கும் குறைவான இளைஞர்களுக்கு இலவச தொழிற்கல்வி வழங்குகிறது. இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் லாஜிஸ்டிக்ஸ் துறையில் வேலை பெறும் வகையில் பல்வேறு பயிற்சிகளை, 45 முதல் 90 நாட்கள் வரை வழங்கப்படுகின்றன. பயிற்சிகளுக்காக மாணவர்கள் எந்தவித கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.

முயற்சி, கரூரில் பிறந்து, அமெரிக்காவில் வசிக்கும் மருத்துவர் டாக்டர் எம். ராம்மோகன், மகாலட்சுமி, முத்துராமலிங்கம் அறக்கட்டளையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தை அமெரிக்காவில் வசிக்கும் டாக்டர் ராஜேந்திர பிரசாத் பரிந்துரையின் பேரில், ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி கல்விக் கழகத் தலைவர் டாக்டர். வி.ஜி. மோகன் பிரசாத் மற்றும் அதன் உறுப்பினர்கள், அறங்காவலர்களின் ஆதரவுடன் தொடங்கப்பட்டுள்ளது. இந்த மையம் குறித்து கோவை இராமநாதபுரம் பகுதியில் உள்ள விஜிஎம் மருத்துவமனையில் டாக்டர், மோகன் பிரசாத் கூறியதாவது..

ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி கல்விக் கழக தலைவராக தான் இருந்து வருகின்றேன் இதனை தொடர்ந்து உடுமலைப்பேட்டையில் பொருளாதாரத்தில் பின் தங்கிய இளைஞர்களின் வாழ்வை மேம்படுத்தும் நோக்கில் திறன் மேம்பாட்டு பயிற்சி மையத்தைதுவங்கி உள்ளதாகவும், இம்மையம் மூலமாக, தொழிற்கல்வி பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு தன்னம்பிக்கை மற்றும் நிலையான வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும். இந்த திறன் மையம் கிராமப்புற இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கும்" என்றார்.ண்ணா யுனிவர்சிட்டியின் ஓய்வு பெற்ற பேராசிரியர்ராவ்,ரோட்டேரியன் சாய்ராம், ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி கல்விக் கழகத்தின் துணை செயலாளர் கோபாலன், பொள்ளாச்சி ஐ.டி. நிபுணர் ராமலிங்கம், வினோத், பாலா மற்றும் கௌதம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் மேற்கு ஒன்றியம் சக்திகேந்திர கூட்டம் நடைபெற்றது



தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் மேற்கு ஒன்றியம்சக்தி கேந்திரகூட்டம் நடைபெற்றது

தலைமை P பாலசுப்ரமணியம் ஒன்றிய பொது செயலாளர் வரவேற்புரை. முத்துராமன் அவர்கள்சிறப்புஅழைப்பாளர் சுபாஷ் ரெட்டி அவர்கள் ஆந்திர மாநிலம் முன்னாள் எம்எல்ஏ

மற்றும்மாநிலசெயற்குழு உறுப்பினர் எஸ் வி அன்புராஜ் அவர்கள் மாவட்ட பொருளாளர் கோதை மாரியப்பன் அவர்கள் அருள்செல்வன் மாவட்ட பொதுச் செயலாளர் அவர்கள் மாவட்ட செயலாளர் அருணாசலம் அவர்கள் மாவட்ட இளைஞரணி பொதுச் செயலாளர் கார்மேகநாதன் அவர்கள் மாநில செயற்குழு உறுப்பினர் உமா முருகன் அவர்கள் பேச்சிமுத்து அவர்கள் மாவட்ட பிரச்சார அணி செயலாளர் தங்க முதலாளி மாவட்ட விவசாய அணி பொதுச்செயலாளர் சுடலைக்கனி விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு பிரிவு மாவட்ட செயலாளர் மற்றும் சக்தி கேந்திர தலைவர்கள் எல் எம் குமரேசன் அவர்கள் இசக்கிமுத்து அவர்கள் மணிகண்டன் அவர்கள் தங்கச்சாமி அவர்கள் சின்னத்தம்பி அவர்கள் கண்ணன் அவர்கள் ஒன்றிய விவசாய அணி தலைவர் பேட்டைமுருகன்அவர்கள் வேல்சாமிஅவர்கள் மற்றும் கிளைதலைவர்கள் ஆ கோபாலகிருஷ்ணன் ஆ முத்து கிருஷ்ணன் முத்துராமன் ஸ்ரீராம் ஆ.தங்கராஜ் ந. தங்கராஜ் ஆ.மாதவன் சு. தங்கராஜ் முன்னாள் பஞ்சாயத்து எழுத்தர் மற்றும் சக்தி கேந்திர பொறுப்பாளர்கள் பாஜக கிளை பொருப்பாளர்கள் கலந்து கொண்டனர் .

# யுனைடெட் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 4 ஆம் ஆண்டு கல்லூரி ஆண்டு விழா கொண்டாட்டம்



கோவை பெரியநாயக்கன்பாளையம் அருகே உள்ள யுனைடெட் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 4 ஆம் ஆண்டு கல்லூரி ஆண்டு விழாவான சாதனையாளர்களை கொண்டாடும் யுகாஸ் 26 விழா நடைபெற்றது. இதில் கல்லூரி அளவில் பல துறைகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் சிறப்பாகச் செயலாற்றிய பேராசிரியர்களுக்கும் பரிசுகளும் விருதுகளும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. தொடர்ந்து சினிமா மற்றும் தொலைக்காட்சி புகழ் கலைஞர்கள் பங்கேற்றகலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கோவை பெரியநாயக்கன்பாளையம் அருகே உள்ள யுனைடெட் கல்வி நிறுவனங்களின் ஓர் அங்கமான யுனைடெட் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 4 ஆம் ஆண்டு கல்லூரி ஆண்டு விழாவான சாதனையாளர்களை கொண்டாடும் யுகாஸ் 26 விழா கல்லூரியின் சரஸ்வதி அரங்கு மற்றும் மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யுனைடெட் கல்விக் குழுமத்தின் தலைவர் மற்றும் நிறுவனர் பொறியாளர் எஸ் சண்முகம் தலைமையேற்று உரையாற்றினார். யுனைடெட் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் ஆ.விஜயா கல்லூரியின் செயல்பாடுகள் குறித்து ஆண்டறிக்கையினை வாசித்தார். யுனைடெட் கல்விக் குழுமத்தின் நிர்வாக அறங்காவலர் முனைவர் சி ஏ எம் கைலாஷ்குமார், செயலாளர் அருண்கார்த்திகேயன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.


சிறப்பு விருந்தினராக புகழ்பெற்றசின்னதிரை நட்சத்திரம் பிரனிகா தக்சு கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான வழிகளை தம் வாழ்க்கை அனுபவங்கள் வழி எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார்.

கல்லூரி அளவிலே பல துறைகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், சிறப்பாகச் செயலாற்றிய பேராசிரியர்களுக்கும் பரிசுகளும், விருதுகளும் வழங்கப்பட்டு கவுரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து மாலை கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக விஜய் தொலைகாட்சி மற்றும் சன் தொலைகாட்சிகளின் புகழ்மிக்க பாடகர்களானஸ்ரீதர்சேனா, ரெஹானா, ஆதனா ஸ்ரீ, நகைச்சுவை பேச்சாளர்களான சுட்டி அரவிந்த், அசார், சின்னதிரை நட்சத்திரம் பிரனிகா தக்சு, டி.ஜே யோகராஜ் மற்றும் டி.ஜே வால்சன் வேல் போன்ற பிரபலங்கள் கலந்து கொண்ட கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்வினை மனோஜ்குமார் தொகுத்து வழங்கினார்.

# "காலம் பேசாது; காத்திருந்து பதில் சொல்லும்" ஆதவ் அர்ஜுனாவுக்கு ரஜினிகாந்த் பதிலடி





சென்னை:

"ரஜினிகாந்த். தமிழக அரசியலுக்கு வந்து சிஸ்டத்தை மாற்ற வேண்டும் என்று விரும்பினார். ஆனால் திமுக ரஜினிகாந்துக்கு பல மிரட்டல்களை கொடுத்தது." என்று ஆதவ் அர்ஜுனா கூறியிருந்த நிலையில், "காலம் பேசாது ஆனால் காத்திருந்து பதில் சொல்லும்" என்று அவருக்கு நடிகர் ரஜினிகாந்த் பதிலடி கொடுத்துள்ளார்.

இது குறித்து நடிகர் ரஜினிகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தவெக கட்சியின் தலைமைப்பொறுப்பில் இருக்கும் ஆதவ் அர்ஜுனா சமீபத்தில் என்னைப் பற்றி உண்மைக்கு மாறான ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார் அ ஆதவ் பேசியது என்ன? முன்னதாக கடந்த 12-ம் தேதி தமிழக வெற்றிக் கழகத்தின் போராட்டத்தில் கலந்துகொண்ட அக்கட்சி நிர்வாகி ஆதவ் அர்ஜுனா, "எம்ஜிஆருக்கு பின் ஒரு பிரபலமான நடிகராக இருந்து அரசியலுக்கு வர நினைத்தவர் ரஜினிகாந்த். தமிழக அரசியலுக்கு வந்து சிஸ்டத்தை மாற்ற வேண்டும் என்று விரும்பினார். ஆனால் இதே திமுக குடும்பம் ரஜினிகாந்துக்கு பல மிரட்டல்களை கொடுத்தது.

அவரை அரசியலுக்கு வரவிடாமல் பார்த்துக் கொண்டது.அவர் இன்று என்ன ஆனார், கடைசியில் ரெட் ஜெயண்ட் தயாரிப்பிலேயே நடிக்கச் சென்றுவிட்டார். ரஜினிகாந்த் மீது எந்த விமர்சனமும் கிடையாது. ஆனால் மிரட்டலை சமாளிக்கும் மனவலிமை "விஜய்யிடம் இருக்கிறது" என்று கூறியிருந்தார். இது ரஜினி ரசிகர்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில் ரஜினிகாந்த் தனது கண்டனத்தை அறிக்கை வாயிலாகப் பதிவு செய்துள்ளார்.வருடைய அவதூறுக் கருத்தைக் கண்டித்து, எனக்கு ஆதரவாகக் குரல் கொடுத்த தமிழக சட்டப்பேரவை எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய அமைச்சர் எல்.முருகன், தமிழக அமைச்சர் ரகுபதி, தொல். திருமாவளவன், எஸ். பி.வேலுமணி, நண்பர் அண்ணாமலை, அர்ஜுன மூர்த்தி, அன்புமணி ராமதாஸ், ஜி. கே.வாசன், ஜான் பாண்டியன், புகழேந்தி மற்றும் பல கட்சி அரசியல் தலைவர்கள், அமீர், ஜி. தனஞ்சயன் மற்றும் திரையுலக நண்பர்கள், மற்றும் நக்கீரன் கோபால், சாணக்கியா ரங்கராஜ் பாண்டே மற்றும் ஊடகத் துறையினர், என்னை வாழவைக்கும் தெய்வங்களான ரசிகப் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்."காலம் பேசாது ஆனால் காத்திருந்து பதில் சொல்லும்" வாழ்க தமிழ்நாடு! வளர்க தமிழக மக்கள்!! ஜெய்ஹிந்த்!" என்று ரஜினிகாந்த் கூறியுள்ளார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.